வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.32,69,98,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.36,13,89,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பிற்பகல் 2-15

7. அறிவிப்பு

பேரவைத் தலைவரின் மே தின வாழ்த்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகை, தொலைக்காட்சி நண்பர்கள், தொழிலாளர் நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் மே தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் (5-5-2008) திங்கட்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-15 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.